# கூடுதலாக 10 மெட்ரோ ரயில்களை வாங்கத் திட்டம்

சென்னை, டிச.7: மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டத்துக்காக கூடுதலாக 10 மெட்ரோ ரயில்களை 2020-ஆம் ஆண்டுக்கு முன்னதாக வாங்கத் திட்டமிட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் விமானநிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் சேவைக்கான பணிகள் நடந்து வந்தன. இதில், இரண்டாவது வழித்தடப் பணிகள் நிறைவடைந்து மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. முதல் வழித்தடத்தில், தேனாம்பேட்டை (டி.எம்.எஸ்) -வண்ணாரப்பேட்டை இடையே 10 கி.மீ. தூரத்தில் சுரங்கப்பாதை பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் பாதையில் ஜனவரி மாதம் மெட்ரோ ரயிலை இயக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் சேவைக்காக 42 ஆவது ரயில், ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் அல்ஸ்தம் தொழிற்சாலையில் இருந்து வியாழக்கிழமை (டிச.7) அனுப்பி வைக்கப்பட்டது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் கூறியதாவது:

மெட்ரோ ரயிலின் முதல் கட்ட சேவைக்காக அல்ஸ்தம் குழும நிறுவனங்களிடம் 42 ரயில்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவற்றில் 9 ரயில்கள் பிரேசிலில் உள்ள அல்ஸ்தம் தொழிற்சாலையில் இருந்து அனுப்பப்பட்டது. மீதமுள்ள 33 ரயில்கள் ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் உள்ள அல்ஸ்தம் தொழிற்சாலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு மத்தியில் தயாரிக்கும் பணி தொடங்கியது. 2014 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முதல் ரயில் தயாரித்து சென்னை மெட்ரோ ரயில் சேவைக்காக அனுப்பப்பட்டது. தற்போது 42-வது மெட்ரோ ரயில் ஸ்ரீ சிட்டியில் இருந்து சென்னை மெட்ரோ ரயில் சேவைக்கு வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது. இதை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மெட்ரோ ரயில் முதல் வழித்தடத்தில் விரிவாக்கத் திட்டத்துக்காக, மேலும் 10 ரயில்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. விமானநிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தட விரிவாக்கத் திட்டத்தில் ( வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரை வழித்தடத்தில்) இந்த ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ரயில்களை 2020 ஆம் ஆண்டுக்கு முன்னதாகப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது என்றனர் அவர்கள்.



ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் இருந்து சென்னை மெட்ரோ ரயில் சேவைக்காக அனுப்பி வைக்கப்பட்ட 42-ஆவது மெட்ரோ ரயில்.